CNR NO: TNTH13-008534-2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

**முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,**
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18-ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 232/2022

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
போடி நகர் காவல்நிலையம்,
குற்ற எண்.594/2019. ..... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

ஈஸ்வரன் (வயது 31/2026),
த/பெ.கணேசன். ..... எதிரி

**வழக்கின் சுருக்கம்**

| வ. எண் | விவரம் | |
|---|---|---|
| 1. | இருதரப்பினர்களின் பெயர்கள் | |
| | குற்றமுறையீட்டாளர்:<br>சார்பு ஆய்வாளர்,<br>போடி நகர் காவல்நிலையம். | எதிரி:<br>ஈஸ்வரன். |
| 2. | எதிரியின் வயது | 31/2026. |
| 3. | தந்தை/கணவர் பெயர் | த/பெ.கணேசன். |
| 4. | மதம் | இந்து. |
| 5. | தொழில் | கூலி. |

<table>
<tr><td>6.</td><td>முகவரி</td><td>வடக்கு ராஜ வீதி, போடிநாயக்கனூர்.</td></tr>
<tr><td>7.</td><td>தாலுகா, மாவட்டம்</td><td>போடிநாயக்கனூர், தேனி.</td></tr>
<tr><td>8.</td><td>சம்பவம் நிகழ்ந்த நாள்</td><td>01.05.2019.</td></tr>
<tr><td>9.</td><td>கைது</td><td>07.07.2019.</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவித்தல்</td><td>01.10.2019.</td></tr>
<tr><td>11.</td><td>எதிரி சிறையில் இருந்த நாட்கள்</td><td>87 நாட்கள்.</td></tr>
<tr><td>12.</td><td>இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>27.07.2022.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td>01.11.2022.</td></tr>
<tr><td>14.</td><td>கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td>04.03.2025.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>29.04.2025.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td>09.07.2025.</td></tr>
<tr><td>17.</td><td>சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td><table>
<tr><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
<tr><td>PW2</td><td>02.03.2026</td><td>02.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td>04.03.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>04.03.2026.</td></tr>
<tr><td>20.</td><td>பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td><table>
<tr><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>02.03.2026</td><td>311 of Cr.P.C</td><td>967/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>02.03.2026</td><td>294(3) Cr.P.C</td><td>968/2026</td><td>Allowed</td></tr>
</table></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 21. | தீர்ப்பு விவரம் | விடுதலை. |
| 22. | தீர்ப்புரை நகலை வழங்குதல் | இல்லை. |
| 23. | தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள் | இல்லை. |
| 24. | மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு | இல்லை. |
| 25. | பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு | இல்லை. |
| 26. | காலதாமதத்திற்கான காரணம் | 2026-ஆம் வருடத்தில்தான் அரசுத்தரப்பில் சாட்சிகள் முன்னிடப்பட்டது. |

*****

இவ்வழக்கு 01.11.2022 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 04.03.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை - I திருமதி.M.தவமணிசெல்வி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.E.ஜானகி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

இவ்வழக்கானது சட்டப்பிரிவு 379 இந்திய தண்டனைச் சட்டம் 1860-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு இந்திய தண்டனைச் சட்டம் 1860 இ.த.ச எனவும், குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் 1973 கு.வி.மு.ச எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1). **இறுதியறிக்கையின்படி அரசுத்தரப்பு வழக்கு**:

இவ்வழக்கின் வாதி சன்னாசி என்பவர், அவரது ஸ்டேட் பேங்க் அக்கவுண்ட் நம்பர் 20196785187-லிருந்து பணம் எடுப்பதற்காக கடந்த 01.05.2019-ஆம் தேதி காலை 07.20 மணியளவில் போடிநாயக்கனூர் கால்நடை மருத்துவமனை எதிரிலுள்ள ஸ்டேட் பேங்க் ATM சென்று, அங்கிருந்த எதிரி சன்னாசி என்பவரிடம் ATM கார்டை கொடுத்து, சீக்ரெட் நம்பரை சொல்லி பணம் எடுத்து தருமாறு சொன்னபோது, எதிரி, வாதியிடமிருந்து ATM கார்டை வாங்கி, ATM மெஷினில் நுழைத்து, சீக்ரெட் நம்பரை அழுத்தி பரிவர்த்தனை செய்து, தொகையை மட்டும் போடாமல் மெஷினில் இருந்து பணம் வரவில்லை என்று கூறி வாதியிடம் ATM கார்டை திரும்ப ஒப்படைத்து, வாதி சம்பவ இடத்திலிருந்து வெளியில் சென்ற பின்னர், எதிரி முடிவடையாமல் இருந்த அதே பரிவர்த்தனையை தொடர்ந்து செய்து, வாதியின் அக்கவுண்ட் நம்பரிலிருந்து ரூ.8,000/-ம் பணத்தை திருடிய குற்றத்திற்காக, எதிரி மீது இ.த.ச பிரிவு 379-ன் கீழ் அரசுத் தரப்பில் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207-ன் கீழ் 04.03.2025-ஆம் தேதியன்று இலவசமாக வழங்கப்பட்டது.

3). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. போதிய கால அவகாசத்திற்கு பின் கோப்புகளை பரிசீலனை செய்ததில், எதிரி மீது முகாந்திரம் எழுந்ததால், 29.04.2025-ஆம் தேதியன்று எதிரி மீது இ.த.ச பிரிவு 379–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, கு.வி.மு.ச பிரிவு 281-ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரணைக்கு அழைக்க உத்தரவிடப்பட்டது.

4). அரசுத்தரப்பில் சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அ.சா.1 மற்றும் அ.சா.2 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், அ.சா.பொ.1 சான்றுப்பொருளும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5). **அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசுத்தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு**:

5.1). அ.சா.1 திரு.சன்னாசி சாட்சியத்தில், கடந்த 2019-ஆம் வருடம் காலை 07.00 மணியளவில் போடியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள ஏ.டி.எம்–க்கு பணம் எடுப்பதற்காகச் சென்றபோது, ஒரு நபர் பணம் எடுப்பதற்காக ஏ.டி.எம்–க்கு வந்தார், தனக்கு பணம் எடுக்கத் தெரியாததால், அந்த நபரிடம் தனது ஏ.டி.எம் கார்டை கொடுத்து பணம் எடுத்து தருமாறு கேட்டதாகவும், அவர் தனது கார்டை ஏ.டி.எம் மிஷினில் கொடுத்துவிட்டு பணம் இல்லை என்று தன்னிடம் கார்டை திருப்பிக் கொடுத்து விட்டதாகவும், அதன் பிறகு தான் வீட்டிற்குச் சென்றபோது தனது செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்ததாகவும், அதில் ரூ.10,000/-த்தை எடுத்ததாக செய்தி வந்ததாகவும், தான் மீண்டும் ஏ.டி.எம் சென்டருக்கு சென்று பார்த்தபோது, அந்த நபர் அங்கு காணவில்லை என்றும், அதன்பிறகு தான் போடி நகர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த புகார் தான் கொடுத்ததுதான் என்றும், **புகார் அ.சா.ஆ.1** என்றும், போலீசார் என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், அதன்பிறகு நீதிமன்றத்தில் மனு செய்து ரூபாய் 3 ஆயிரம் பணத்தை தனது இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றேன் என்றும் சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

5.2). அ.சா.2 சார்பு ஆய்வாளர் திரு.குரு கௌதம் சாட்சியத்தில், கடந்த 07.07.2019-

ஆம் தேதி 12.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் இளங்கோவன் அவர்கள் போடி நகர் காவல்நிலையப் பொறுப்பில் இருந்தபோது, சன்னாசி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று, நிலையக் குற்ற எண்.594/2019, இ.த.ச பிரிவுகள் 379-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2** என்றும், 07.07.2019-ஆம் தேதி 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் செல்வம் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து, வாக்குமூலம் பதிவு செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **பார்வை மகஜர் அ.சா.ஆ.3** மற்றும் **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4** என்றும், சாட்சிகள் 1, 2 ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.3). மேற்படி அ.சா.2 சார்பு ஆய்வாளர் திரு.குரு கௌதம் சாட்சியத்தில், பின்னர் 07.07.2019-ஆம் தேதி மதியம் போடி கட்டபொம்மன் சிலை அருகே நின்று கொண்டிருந்த எதிரி ஈஸ்வரனை, சாட்சிகள் காளிராஜ் மற்றும் பாண்டிசெல்வம் முன்னிலையில் கைது செய்து, அதன்பின் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்து, எதிரியிடமும், சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றுள்ளார் என்றும், **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.5** என்றும் அதன்பின் எதிரி அவரது சட்டைப் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொடுத்த ரூ.3000/-த்தை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார் என்றும், **ரூ.500/- எண்ணிக்கை - 6 அடங்கிய புகைப்படம் அ.சா.பொ.1** மற்றும் **அத்தாட்சி அ.சா.ஆ.6** என்றும், எதிரியை கைது செய்து, வழக்குச் சொத்தை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி, நிலையம் வந்து, எதிரியை பாரா வசம் ஒப்புவித்து, எதிரியை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

5.4). மேற்படி அ.சா.2 சார்பு ஆய்வாளர் திரு.குரு கௌதம் சாட்சியத்தில், வழக்குச் சொத்தினை படிவம் - 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், **படிவம் - 91 அ.சா.ஆ.7** என்றும், அதன்பின் சாட்சிகள் பாண்டிசெல்வம் மற்றும் காளிராஜ் ஆகியோரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், அதன்பின் வழக்கு கோப்பினை சார்பு ஆய்வாளர் மகேஷ்வரி மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, எஸ்.பி.ஐ மேலாளர் கார்த்திகேயனை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, அதன்பின்னர் வழக்கு விசாரணையை முடித்து, 26.07.2019-ஆம் தேதி எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவு 379-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

6). அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்குப் பாதகமாக அமையும் சாட்சியங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச 313(1)(b) பிரிவின் கீழ் 04.03.2026-ஆம் தேதி வினவியபோது, எதிரி சாட்சிகள் கூறுவது பொய் சாட்சி என்றும், மேலும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறினார். பின்னர், தகுந்த வாய்ப்பிற்கு பிறகு எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7).**<u>தீர்விற்குரிய பிரச்சினை</u>**:

இவ்வழக்கில் ஆராய்ந்து தெளிவு காணப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த வழக்கின் எதிரி மீது இ.த.ச பிரிவு 379–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

8). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**:

8.1). இவ்வழக்கின் அ.சா.1 சன்னாசி என்பவர், அவரது ஸ்டேட் பேங்க்

அக்கவுண்ட் நம்பர் 20196785187-லிருந்து பணம் எடுப்பதற்காக கடந்த 01.05.2019-ஆம் தேதி காலை 07.20 மணியளவில் போடிநாயக்கனூர் கால்நடை மருத்துவமனை எதிரிலுள்ள ஸ்டேட் பேங்க் ATM சென்று, அங்கிருந்த எதிரி ஈஸ்வரன் என்பவரிடம் ATM கார்டை கொடுத்து, சீக்ரெட் நம்பரை சொல்லி பணம் எடுத்து தருமாறு சொன்னபோது, எதிரி, அ.சா.1-னிடமிருந்து ATM கார்டை வாங்கி, ATM மெஷினில் நுழைத்து, சீக்ரெட் நம்பரை அழுத்தி பரிவர்த்தனை செய்து, தொகையை மட்டும் போடாமல் மெஷினில் இருந்து பணம் வரவில்லை என்று கூறி அ.சா.1–னிடம் ATM கார்டை திரும்ப ஒப்படைத்து, அ.சா.1 சம்பவ இடத்திலிருந்து வெளியில் சென்ற பின்னர், எதிரி முடிவடையாமல் இருந்த அதே பரிவர்த்தனையை தொடர்ந்து செய்து, அ.சா.1-ன் அக்கவுண்ட் நம்பரிலிருந்து ரூ.8,000/-ம் பணத்தை திருடியதாக அரசுத்தரப்பில் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு குறித்துப் பரிசீலனை செய்கையில்,

8.2). இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சன்னாசி தனது முதல் விசாரணையில், **"நான் தற்போது மீனாட்சிபுரத்தில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2019-ஆம் வருடம் காலை 07.00 மணியளவில் போடியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள ஏ.டி.எம்–க்கு பணம் எடுப்பதற்காகச் சென்றேன். அப்போது ஒரு நபர் பணம் எடுப்பதற்காக ஏ.டி.எம்–க்கு வந்தார். எனக்கு பணம் எடுக்கத் தெரியாததால், அந்த நபரிடம் எனது ஏ.டி.எம் கார்டை கொடுத்து பணம் எடுத்து தருமாறு கேட்டேன். அவர் எனது கார்டை ஏ.டி.எம் மிஷினில் கொடுத்துவிட்டு பணம் இல்லை என்று என்னிடம் கார்டை திருப்பிக் கொடுத்து விட்டார். அதன் பிறகு நான் வீட்டிற்குச் சென்றபோது எனது செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்தது. அதில் ரூ.10,000/-த்தை எடுத்ததாக செய்தி வந்தது. நான் மீண்டும் ஏ.டி.எம் சென்டருக்கு சென்று பார்த்தபோது, அந்த நபர் அங்கு காணவில்லை. அதன்பிறகு நான் போடி நகர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் நான் கொடுத்ததுதான். புகார் அ.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தனர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அதன்பிறகு**

**நீதிமன்றத்தில் மனு செய்து ரூபாய் 3 ஆயிரம் பணத்தை எனது இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றேன்**" என்றும் சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமாக்கப்பட்டுள்ளார்.

8.3). அரசுத்தரப்பு குற்றச்சாட்டில், கடந்த 01.05.2019-ஆம் தேதி காலை 07.20 மணியளவில் போடிநாயக்கனூர் கால்நடை மருத்துவமனை எதிரிலுள்ள ஸ்டேட் பேங்க் ATM சென்று, அங்கிருந்த எதிரி ஈஸ்வரன் என்பவரிடம் ATM கார்டை கொடுத்து, சீக்ரெட் நம்பரை சொல்லி பணம் எடுத்து தருமாறு சொன்னபோது, எதிரி, அ.சா.1-னிடமிருந்து ATM கார்டை வாங்கி, ATM மெஷினில் நுழைத்து, சீக்ரெட் நம்பரை அழுத்தி பரிவர்த்தனை செய்து, தொகையை மட்டும் போடாமல் மெஷினில் இருந்து பணம் வரவில்லை என்று கூறி அ.சா.1–னிடம் ATM கார்டை திரும்ப ஒப்படைத்து, அ.சா.1 சம்பவ இடத்திலிருந்து வெளியில் சென்ற பின்னர், எதிரி முடிவடையாமல் இருந்த அதே பரிவர்த்தனையை தொடர்ந்து செய்து, அ.சா.1-ன் அக்கவுண்ட் நம்பரிலிருந்து ரூ.8,000/-ம் பணத்தை திருடியதாகவும் குற்றச்சாட்டு முன்னிடப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 சன்னாசி தனது முதல் விசாரணையில், எதிரிதான், தன்னுடைய பணத்தை திருடியதாகக் குறிப்பிட்டு அ.சா.1 சாட்சியமளிக்கவில்லை.

8.4). மேலும், புகார் கொடுத்த சாட்சியான அ.சா.1 சன்னாசி தனது முதல் விசாரணையில், புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையில் எதிரியின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு, தனது சாட்சியத்தில் அரசுத்தரப்பிற்கு ஆதரவாகவும், எதிரிக்குப் பாதகமாகவும் சாட்சியமளிக்கவில்லை. மேலும், அவர் "**கடந்த 2019-ஆம் வருடம் காலை 07.00 மணியளவில் போடியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு பக்கத்தில் உள்ள ஏ.டி.எம்–க்கு பணம் எடுப்பதற்காகச் சென்றேன். அப்போது ஒரு நபர் பணம் எடுப்பதற்காக ஏ.டி.எம்–க்கு வந்தார். எனக்கு பணம் எடுக்கத் தெரியாததால், அந்த நபரிடம் எனது ஏ.டி.எம் கார்டை கொடுத்து பணம் எடுத்து தருமாறு கேட்டேன். அவர் எனது கார்டை ஏ.டி.எம் மிஷினில் கொடுத்துவிட்டு பணம் இல்லை என்று என்னிடம்**

**கார்டை திருப்பிக் கொடுத்து விட்டார். அதன் பிறகு நான் வீட்டிற்குச் சென்றபோது எனது செல்போனுக்கு குறுஞ்செய்தி வந்தது. அதில் ரூ.10,000/-த்தை எடுத்ததாக செய்தி வந்தது. நான் மீண்டும் ஏ.டி.எம் சென்டருக்கு சென்று பார்த்தபோது, அந்த நபர் அங்கு காணவில்லை. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அதன்பிறகுநீதிமன்றத்தில் மனு செய்து ரூபாய் 3 ஆயிரம் பணத்தை எனது இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றேன்**" எனச் சாட்சியமளித்து, அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

8.5). மேலும், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சன்னாசி என்பவர் அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியமளித்துள்ளதாலும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு அரசுத்தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டதாகக் கருத இயலாது. எனவே, இவ்வழக்கின் எதிரிதான் வழக்குச் சம்பவத்தில் ஈடுபட்டார் என்ற விவரம் அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று கருதி, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

## **<u>தீர்வு</u>**

9). முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவு 379–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பால் உரிய சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

10). **<u>கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழான உத்தரவு</u>**:

இவ்வழக்கின் P.R.No.93/2019-ல் கண்ட படிவம் 91-ல் காண்பிக்கப்பட்டுள்ள வழக்குச் சொத்தான அ.சா.பொ.1 புகைப்படத்தில் கண்ட ரூ.3000/–ம் பணத்தை

இந்நீதிமன்றம் Crl.M.P.No.3447/2019 என்ற மனுவில் பிறப்பித்த உத்தரவின்படி இவ்வழக்கின் மனுதாரர்/சொத்தின் உரிமையாளரான அ.சா.1 சன்னாசி என்பவர் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளார். மேல்முறையீடு காலத்திற்குப் பின் மேற்படி சன்னாசி என்பவர் எழுதிக்கொடுத்த பிணைமுறியை இரத்து செய்ய கு.வி.மு.ச பிரிவு 452-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 மார்ச் திங்கள் 18-ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.18 20:11:34 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

**1. அரசுத்தரப்பு சாட்சிகளின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.சன்னாசி | புகார்தாரர் |
| 2. | அ.சா.2 | திரு.குரு கௌதம் | கூடுதல் சாட்சி |

**2). அரசுத்தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | புகார். | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2 |
| 3. | அ.சா.ஆ.3 | பார்வை மகஜர். | அ.சா.2 |
| 4. | அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம். | அ.சா.2 |
| 5. | அ.சா.ஆ.5 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. | அ.சா.2 |
| 6. | அ.சா.ஆ.6 | அத்தாட்சி. | அ.சா.2 |
| 7. | அ.சா.ஆ.7 | படிவம் - 91. | அ.சா.2 |

**3). அரசுத்தரப்பு சான்றுப் பொருள்**:

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.பொ.1 | ரூ.500/- எண்ணிக்கை - 6 அடங்கிய புகைப்படம். | அ.சா.2 |

**4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுப் பொருள்**: தாக்கல் இல்லை.

**5). குறிப்பு**:

1. சாட்சிகள் எவரும் 3 முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.
2. விசாரணை காலத்தில் எதிரி பிணையிலிருந்து முன்னிலையானார்.
3. வழக்கின் முடிவு பற்றி காவல்துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.03.18 20:11:40 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.